**செய்தி வெளியீடு எண்: 657** **நாள் : 31.12.2014**

## செய்தி வெளியீடு

தமிழ்நாட்டை விளையாட்டுத் துறையில் இந்தியாவிலேயே தலை சிறந்த மாநிலமாக உருவாக்கிடும் வகையில், திறமைமிக்க விளையாட்டு வீரர்களை கண்டறிந்து, அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்கள் பெறுவதற்கு ஏதுவாக தகுதி வாய்ந்த பயிற்சியாளர்கள் மூலம் பயிற்சி அளித்தல்; பன்னாட்டுத் தரத்தில் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல்; விளையாட்டு விடுதிகள் கட்டுதல்; உள்விளையாட்டு அரங்கங்களை அமைத்தல்; கிராம விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவித்தல்; ஒலிம்பிக்கில் தங்கம் வெல்பவருக்கு 2 கோடி ரூபாய், வெள்ளிப் பதக்கம் வெல்பவருக்கு 1 கோடி ரூபாய், வெண்கலப் பதக்கம் வெல்பவருக்கு 50 லட்சம் ரூபாய் என பரிசுத் தொகை வழங்குதல்; ஆசிய மற்றும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்பவருக்கு 50 லட்சம் ரூபாய், வெள்ளிப் பதக்கம் வெல்பவருக்கு 30 லட்சம் ரூபாய், வெண்கலப் பதக்கம் வெல்பவருக்கு 20 லட்சம் ரூபாய் என பரிசுத் தொகை வழங்குதல்;

ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் பெற வாய்ப்புள்ள தலைசிறந்த 5 விளையாட்டு வீரர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தலா 25 லட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்குதல்; சர்வதேச விளையாட்டரங்கில் வெற்றி பெறும் விளையாட்டு வீரர்களுக்கு மருத்துவர்கள் மற்றும் உணவு நிபுணர்களின் ஆலோசனைப்படி விஞ்ஞான முறையில் விளையாட்டின் தன்மையின் அடிப்படையில் சத்தான சமச்சீர் உணவு வழங்குதல்; பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளை தமிழகத்தில் நடத்துதல்; விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு பொறியியல் கல்லூரிகளில் ஒதுக்கப்பட்டுள்ள இடங்களை 100-லிருந்து 500 ஆக உயர்த்தியது உள்ளிட்ட விளையாட்டினை ஊக்குவிக்கும் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வரிசையில் தமிழ்நாடு டென்னிஸ் சங்கத்தால் ஆண்டுதோறும் சென்னையில் நடத்தப்பட்டு வருகின்ற உலகப் புகழ் பெற்ற டென்னிஸ் விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ளும் மிக முக்கியப் போட்டியான சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியினை 2005–ஆம் ஆண்டு சிறப்பாக நடத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முதன் முறையாக தமிழ்நாடு அரசின் சார்பில் 1 கோடி ரூபாய் நிதி வழங்கினார்கள். பின்னர், ஜனவரி 2014–ல் நடைபெற்ற சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியை சிறப்பாக நடத்திடும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் 2 கோடி ரூபாய் நிதியுதவியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

மேலும் 2014 முதல் 2016 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியினை நடத்துவதற்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் 2 கோடி ரூபாயினை தமிழ்நாடு அரசு வழங்கும் வகையில் தமிழ்நாடு அரசினை 'தலைமை பிளாட்டின நிதி ஆதரவாளராகக்' கொண்டு நிதி ஆதரவு தரும் பிற நிறுவனங்களை இணைத்து 'நிதி ஆதரவாளர் குழுமத்தை' நியமனம் செய்து 5.11.2013 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இதுதவிர தமிழ்நாடு அரசு சென்னை நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய டென்னிஸ் விளையாட்டு அரங்கத்தினை 4 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் புனரமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.10.2013 அன்று ஆணை வழங்கினார்கள். அதனடிப்படையில் சென்னை, நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கத்தில் அனைத்து புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு, தற்போது இந்த டென்னிஸ் விளையாட்டு அரங்கம் உலகத்தரத்திற்கு இணையாக மேம்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அனைத்து வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கத்தில் தான் 'சென்னை ஓபன் டென்னிஸ் 2015' வரும் ஜனவரி 5ஆம் தேதி முதல் 11–ந் தேதி வரை நடைபெறவுள்ளது.

சென்னை மாநகருக்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் நடைபெறவுள்ள இந்த 'சென்னை ஓபன் டென்னிஸ் 2015' சீருடனும் சிறப்புடனும் நடைபெறும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே ஆணையிட்டதன் அடிப்படையில் தற்போது தமிழ்நாடு அரசு தன் பங்களிப்பாக 2 கோடி ரூபாய் வழங்கியுள்ளது.

இதன்மூலம், தமிழ்நாட்டில் இளைஞர்களிடையேயும் டென்னிஸ் ஆர்வலர்களிடையேயும் டென்னிஸ் விளையாட்டினை மேலும் பிரபலம் அடையச் செய்து அதன்மூலம் இம்மாநிலத்திலிருந்து அதிகப்படியான வீரர்கள் இவ்விளையாட்டில் ஆர்வம் கொண்டு பயிற்சி பெற்று விளையாடி வெற்றி கண்டு உலக அரங்கில் தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் புகழ் தேடித்தர வாய்ப்பு உருவாகும்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள் : 31.12.2014